## சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 106/2011 (வா.சா1 – வெங்கடேசன் ) தேதி:28.01.2026.**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

பிராது தாக்கல் செய்த போது சொத்து விவரத்தில் சர்வே எண் 603/1 என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் மனு சொத்து விவரத்தில் சர்வே எண் 603/1 என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னர் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை மற்றும் ஆட்சேபணை தாக்கல் செய்த பின்னர் மேற்படி சர்வே எண் விவரத்தை டவுண் சர்வே எண் 56 என சீர்திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையருக்கு நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்பட்ட வாரண்டிலும் சர்வே எண் 603/1, டவுண் சர்வே எண் 56 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தில் டவுண் சர்வே எண் 56/1 என உள்ளது என்றால் சரிதான். அது தற்சமயம் அவ்வாறு உள்ளது. வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தில் ராஜேஷ் கண்ணனுக்கு நாங்கள் எழுதி கொடுத்த போது சர்வே எண் 603/1 என குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளோம் என்றால் பழைய பத்திரத்தில் எவ்வாறு இருந்ததோ அதே போல் எழுதி கொடுத்துவிட்டோம். வா.சா.ஆ.7 ல் எங்கள் கையிருப்பு இடத்திற்கும் மேற்கு என குறிப்பிட்டுள்ள நிலையில் கையிருப்பு இடத்தின் நீள,அகலம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட நகர அளவை பதிவேட்டில் சர்வே எண் 56/1 என்றும் அதில் எங்களிடம் கிரையம் வாங்கிய ராஜேஷ் கண்ணன் பெயரும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் எனது பெயர் விடுபட்டுள்ளது. விடுபட்ட எனது பெயரை சேர்ப்பதற்கு

நாளது தேதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தற்பொழுதுதான் எனது பெயர் விடுபட்ட விவரம் தெரிய வருகிறது. இனி நடவடிக்கை எடுப்பேன். நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு எனது தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்ட டவுன் சர்வே ஆவணத்தை அந்த சமயத்தில் நான் பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.